ஏப்ரல் – ஜுன் 2023-ஆம் மாதங்களுக்கு
சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay authorization,
for the month of April - June 2023)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்
சென்னை – 600 009

**கடித எண். 4587/பக5(1)/2023-1, நாள் 28.04.2023.**

அனுப்புநர்

திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

28/04/23

பெறுநர்

அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி - 2011-12 ஆம் ஆண்டில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் பள்ளிக்கல்வித் துறையின்கீழ் இயங்கும் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்புகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட 1282 பட்டதாரி ஆசிரியர் தற்காலிகப் பணியிடங்களுக்கு ஏப்ரல், மே மற்றும் ஜுன்-2023 வரையிலான மூன்று மாதங்களுக்கு ஊதிய கொடுப்பாணை வழங்குதல் – குறித்து.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.193, பள்ளிக் கல்வித் [வ.செ.2]துறை, நாள் : 02.12.2011.
2. அரசாணை (1டி) எண்.224, பள்ளிக் கல்வித் [பக5(1)] துறை நாள் 12.08.2022.
3. பள்ளிக்கல்வி ஆணையரின் கடிதந.க.எண்.000506/எல்/, இ3/2022, நாள்: 06.04.2022.

---

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் 2011-12 ஆம் ஆண்டில் பள்ளிக்கல்வித் துறையின்கீழ் இயங்கும் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்புகளுக்கு நியமனம் செய்ய 1282 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் தொடக்கக் கல்வித் துறையின்கீழ் இயங்கும் நடுநிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்புகளுக்கு நியமனம் செய்ய 1581, பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் 3565 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் ஆக மொத்தம் 6428 கூடுதல் ஆசிரியர் பணியிடங்களுக்கு ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. பார்வை இரண்டில் காணும் அரசாணையில், மேற்காணும் பணியிடங்களில் 1282 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு கடைசியாக 01.01.2022 முதல் 31.12.2022 வரை தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

3. மேற்காணும் தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2023 முதல் 31.12.2025 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்க பள்ளிக் கல்வி ஆணையர் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார். மேலும், தற்பொழுது, இப்பணியிடங்களுக்கு ஏப்ரல் 2023-ஆம் மாதத்திற்கு ஊதியம் பெறத்தக்க வகையில் சம்பளம் வழங்க ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்குறிப்பிட்டுள்ள தற்காலிக பணியிடங்களுக்கு 01.01.2023 முதல் 31.12.2025 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில், இக்கடிதத்தின் இணைப்பில் கண்டுள்ள 1282 பட்டதாரி ஆசிரியர் தற்காலிகப் பணியிடங்களுக்கு ஏப்ரல், மே மற்றும் ஜுன்-2023 வரையிலான மூன்று மாதங்களுக்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான ஏப்ரல், மே மற்றும் ஜுன்-2023 வரையிலான மூன்று மாதங்களுக்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. இக்கடிதம், அரசாணை (நிலை) எண்.334, நிதி(வ.செ. பொது-I), நாள் 22.10.2022 இன்படி நிதித் துறையின் இசைவு பெறத் தேவையில்லை.

தங்கள் நம்பிக்கையுள்ள,

ச. சுப்பையா 28/4/23
(அரசு சார்புச் செயலாளர்)

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

நகல்:

பள்ளிக்கல்வி ஆணையர், சென்னை-6(இ).

மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.

நிதி(கல்வி-II)த் துறை , சென்னை-9.

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்:- இவ்வாணையரக ந.க.எண்: 000506/என்/இ2/22 நாள்: 28.04.22

தகவலுக்காகவும் தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களின் அனுப்பப்படுகிறது.

Joint Director (NSS),
Commissionerate of School Education,
Chennai-600 006.
28/4/22

28/4/22

பெறுநர்:-
அனைத்து முதன்மைக் கல்வி
அலுவலர்

<u>அரசு கடித எண்.4587/ பக [பக5(1)/2023-1, நாள் 28.04.2023 இன் இணைப்பு</u>

2011-12ஆம் கல்வியாண்டில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ், பள்ளிக் கல்வித் துறையில் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு தோற்றுவிக்கப்பட்ட 1282 கூடுதல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களின் மாவட்ட வாரியான மற்றும் பாடவாரியான விவரம் :-

பழைய ஊதிய விகிதம் ரூ.9300-34800 + தர ஊதியம் ரூ.4600/- (புதிய ஊதிய விகிதம் : நிலை -16, ரூ.36,400-1,15,700)

| | |
|---|---|
| பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்ட அரசாணை. | அரசாணை (நிலை) எண். 193, பள்ளிக் கல்வி (வ.செ.2)த் துறை, நாள் 02.12.2011. |
| கடைசியாக தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்ட அரசாணை மற்றும் காலம். | அரசாணை (1டி) எண். 224, பள்ளிக் கல்வி [பக5(1)]த் துறை, நாள். 12.08.2022. (01.01.2022 முதல் 31.12.2022 வரை) |

| வரிசை எண் | மாவட்டம் | அறிவியல் (ம)கணிதம் | சமூக அறிவியல் | மொழிப் பாடம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | 2 | 2 | 2 | 6 |
| 2. | கோயம்புத்தூர் | 71 | 71 | 71 | 213 |
| 3. | தர்மபுரி | 24 | 24 | 23 | 71 |
| 4. | திண்டுக்கல் | 1 | - | - | 1 |
| 5. | ஈரோடு | 31 | 31 | 30 | 92 |
| 6. | காஞ்சிபுரம் | 18 | 18 | 18 | 54 |
| 7. | கரூர் | 1 | 1 | 1 | 3 |
| 8. | கிருட்டிணகிரி | 19 | 19 | 19 | 57 |
| 9. | மதுரை | 24 | 24 | 24 | 72 |
| 10. | நாகபட்டிணம் | 15 | 15 | 15 | 45 |
| 11. | நாமக்கல் | 5 | 5 | 4 | 14 |
| 12. | பெரம்பலூர் | 8 | 8 | 8 | 24 |
| 13. | புதுக்கோட்டை | 17 | 17 | 16 | 50 |
| 14. | சிவகங்கை | 11 | 11 | 11 | 33 |
| 15. | தேனி | 4 | 4 | 3 | 11 |
| 16. | திருச்சி | 7 | 7 | 7 | 21 |
| 17. | திருநெல்வேலி | 7 | 7 | 7 | 21 |
| 18. | திருவள்ளூர் | 23 | 23 | 23 | 69 |
| 19. | திருவாரூர் | 19 | 19 | 19 | 57 |
| 20. | திருவண்ணாமலை | 22 | 22 | 22 | 66 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21. | தூத்துக்குடி | 7 | 7 | 7 | 21 |
| 22. | வேலூர் | 35 | 35 | 35 | 105 |
| 23. | விழுப்புரம் | 57 | 57 | 56 | 170 |
| 24. | விருதுநகர் | 2 | 2 | 2 | 6 |
| . | மொத்தம் | 430 | 429 | 423 | 1282 |

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

/உண்மை நகல்/

28/4/23

பிரிவு அலுவலர்.

28.4.23